நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

# ★ சிறுபான்மை இன மக்களின் நலன்களை பாதுகாத்து இனப்பிரச்னைக்கு தீர்வுகாண வேண்டும் அஸ்கிரிய மகாநாயக்கர்

(கொழும்பு)

சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாக்கும் விதத்தில் இனப்பிரச்னைக்கு விரைவில் ஒருதீர்வு காணப்படவேண்டும். அஸ்கிரிய பீட மகா நாயக்க தேரர் ஜனாதிபதிக்கு நேற்று இவ்வாறு வேண்டு கோள் விடுத்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற மதவைபவத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE. EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 8 இதழ் 326
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 02 – 01 – 1903

## எதிர்க்கட்சிகளுக்கு புதிய உத்வேகம் கிடைக்கும் ஜனாதிபதி

(கொழும்பு)

இனப்பிரச்னை விவகாரத்தில் அஸ்கிரிய மாநாயக்க தேரர் தெரிவித்த கருத்து வரவேற்கத்தக்கது. இது அரசதரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் புதிய உத்வேகத்தைக் கொடுக்கும்.

அஸ்கிரிய மகா நாயக்க தேரர் இனப்பிரச்சனை தொடர்பாக தெரிவித்த கருத்துக்கு பதிலளித்துப் பேசிய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தீர்வில் நம்பிக்கையில்லை

(கொழும்பு)

இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் இனப்பிரச்னைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண முடியும் என தான் நம்பவில்லை யென ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்று நாட்டு மக்களுக்கு விடுத்த புத்தாண்டுச் செய்தியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இம்மோதலினால் இது வரையில் சுமார் 25 ஆயிரம்

(4-ம் பக்கம் பார்க்க)

# படையினரின் யுத்தசோர்வை நீக்க இராணுவ தளபதிகள் பெரு முயற்சி!

## ஹமில்டன் பலாலிக்கும் சிசில் அம்பாறைக்கும் விஜயம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் தொடர் அதிரடித் தாக்குதல்களினால் சோர்வுற்றிருக்கும் ஸ்ரீலங்கா படையினரை உற்சாகமூட்டி, அவர்களை மீண்டும் யுத்த சூழ்நிலைக்குத் தயார் படுத்துவதற்கு இராணுவத் தளபதிகள் பெருமுயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் இதன் முதல் கட்டமாக இராணுவத்தின் இரு உயர் தளபதிகள் வடக்கு-கிழக்கு யுத்தமுனைகளுக்கு நேற்று முன்தினம் திடீர் விஜயங்களை மேற்கொண்டனர்.

ஸ்ரீலங்கா கூட்டுப்படைத் தலைமையகத்தின் டெபகுதிக்கும் இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் தளபதி மேஜா ஜெனரல் சிசில் வனசிங்க நேற்று முன்தினம் வைத்தியரத்ன அம்பாறைக்கும் விஜயம் செய்தனர்.

ஜெனரல் ஹமில்டன்வன சிங்கா பலாலி இராணுவமுகாமுக்கும், காங்கேசன்துறை மாதகல், இளவாலை இடைக்

க. பொ. த (உ/த) பரீட்சை

## படையில் சேர்வோர்க்கு தேசிய உணர்வு இல்லை

(கொழும்பு)

"விடுதலைப்புலிகளின் தியாக உணர்வும் மன உறுதியுமே அரசபடைகளை மிஞ்சுமளவுக்கு அவர்கள் முன்னேறுவதற்கு காரணமாகவுள்ளது" இவ்வாறு கொழும்பு ஆங்கில ஏடான தஐலண்ட் பத்திரிகை அதன் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்காப் படையில் சேர்பவர்களுக்கு தேசிய உணர்வோ நாட்டுப்பற்றோ இருப்பதில்லை.

படையினருக்கு வழங்கப்படும் கவர்ச்சிகரமான ஊதியத்திற்காகவே சிங்கள இளைஞர்கள் படையில் சேர்கிறார்கள்.

பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக்கொண்டு படைகளில் சேரும் சிங்கள இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வடக்கு-கிழக்குப் போர்முனை

## பாரிய இராணுவ நடவடிக்கை திட்டமிடப்படவில்லை

### - பிரிகேடியர் அங்கமன

(கொழும்பு)

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ... ராகிவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிப்பதும்

## ஹமில்டன் பலாலிக்கும் சிசில் அம்பாறைக்கும் விஜயம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் தொடர் அதிரடித் தாக்குதல்களினால் சோர்வுற்றிருக்கும் ஸ்ரீலங்கா படையினரை உற்சாகமூட்டி, அவர்களை மீண்டும் யுத்த சூழ்நிலைக்குத் தயார் படுத்துவதற்கு இராணுவத் தளபதிகள் பெருமுயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் இதன் முதல் கட்டமாக இராணுவத்தின் இரு உயர் தளபதிகள் வடக்கு-கிழக்கு யுத்தமுனைகளுக்கு நேற்று முன்தினம் திடீர் விஜயங்களை மேற்கொண்டனர்.

ஸ்ரீலங்கா கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்று முன்தினம் [illegible]டைபகுதிக்கும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன அம்பாறைக்கும் விஜயம் செய்தனர்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பலாலி இராணுவமுகாமுக்கும், காங்கேசன்துறை மாதகல், இளவாலை இடைக்காடு ஆகிய இடங்களுக்கும் சென்று அங்குள்ள படையினரை நேரில் சந்தித்து யுத்த நிலைமைகள் குறித்து அவர்களுடன் உரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த (உ/த) பரீட்சை பெறுபேறுகளை உடன் அனுப்புமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

அண்மையில் கொழும்பில் வெளியிடப்பட்ட க. பொ. த. உயர்தர பரீட்சைப்பெறுபேறுகளை உடன் அனுப்பிவைக்குமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் பரீட்சைகள் ஆணையாளருக்கு அவசர தகவல் ஒன்றை மீண்டும் அனுப்பிவைத்துள்ளார்.

மாணவர்கள், பெற்றோர் இப்பெறுபேறுகளை அறிய ஆவலாக இருப்பதை தெரிவித்து அவர் கொழும்புக்கு வானொலி தகவல் அனுப்பி வைத்துள்ளார். (இ-157)

## நள்ளிரவில் படையினர் துப்பாக்கி வேட்டு

(வட்டுக்கோட்டை)

நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் மாதகலில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் திடீரென சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இந்த வேட்டுக்களின் சன்னங்கள் பண்டத்தரிப்பு, சில்லாலை, சுழிபுரம், திருவடிநிலை பனிப்புலம் பகுதிகளில் நெருப்புத்தணல் போல விழுந்தன. கரையோரப் பகுதிகளிலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்த ஆண்டு சமாதானம் மலரட்டும்

### - தொண்டமான்

(கொழும்பு)

இந்தப் புதுவருடம் யுத்த நிறுத்தம், சமாதானத்திற்கு வழிகாட்டுமென எதிர்பார்ப்போமென அமைச்சர் தொண்டமான் தனது புத்தாண்டுச் செய்தியில் கூறியுள்ளார்.

இனப்பிரச்னை தீர்க்கப்பட்டு சகல இன மக்களும் நாட்டில் அமைதி, சமாதானத்துடன் வாழவேண்டும் என்பதே எல்லோரதும் விருப்பமாகும்.

இதற்கேற்ப இந்த ஆண்டு ஒரு சமாதான ஆண்டாகவும் பிரச்னை தீர்க்கப்படவேண்டிய ஆண்டாகவும் இருக்கவேண்டுமென எதிர்பார்ப்போமென்றும் அவர் கூறியுள்ளார். (சி)

## ஆண்டு I புதிய பாடத்திட்டம்: ஆசிரியர் ஆலோசகர்க்கு 5-ம் திகதி முதல் பயிற்சி

(திருநெல்வேலி)

இவ்வாண்டுமுதல் ஆண்டு ஒன்றுக்கு புதிய பாடத்திட்டத்தை முதலாம் தவணையிலிருந்தே அமுல்படுத்தும் விதத்தில் ஆரம்ப ஆசிரிய ஆலோசகர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 5ம் திகதிமுதல் 9 ம் திகதிவரை யாழ் கல்வித

(4-ம்பக்கம் பார்க்க)

## படையில் சேர்வோர்க்கு தேசிய உணர்வு இல்லை

(கொழும்பு)

"விடுதலைப்புலிகளின் தியாக உணர்வும் மன உறுதியுமே அரசபடைகளை மிஞ்சுமளவுக்கு அவர்கள் முன்னேறுவதற்கு காரணமாகவுள்ளது" இவ்வாறு கொழும்பு ஆங்கில ஏடான தஐலண்ட் பத்திரிகை அதன் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்காப் படையில் சேர்பவர்களுக்கு தேசிய உணர்வோ நாட்டுப்பற்றோ இருப்பதில்லை.

படையினருக்கு வழங்கப்படும் கவர்ச்சிகரமான ஊதியத்திற்காகவே சிங்கள இளைஞர்கள் படையில் சேர்கிறார்கள்.

பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக்கொண்டு படைகளில் சேரும் சிங்கள இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வடக்கு-கிழக்குப் போர்முனை

(4-ம் பக்கம் பார்க்க)

## பாரிய இராணுவ நடவடிக்கை திட்டமிடப்படவில்லை

### - பிரிகேடியர் அங்கமன

(கொழும்பு)

வடக்கில் பாரிய இராணுவ தாக்குதல் நடாத்த திட்டமிடப்படவில்லையென இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு பலாலி படைமுகாம்களில் எப்போதும் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பது வழமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றிற்காக படையினர் தயாராகிவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிப்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## புக்காரா கொள்வனவில் கமிஷன் பெறப்படவில்லை

(கொழும்பு)

ஆர்ஜென்டீனா நிறுவனம் ஒன்றிடமிருந்து வாங்கப்பட்ட 'புக்காரா' விமானக் கொள்வனவில் கமிஷன் பெறப்பட்டதாக வந்த செய்திகளை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

விமானப்படைத் தளபதி டெறன்ஸ் குணவர்த்தனவின் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த புக்காரா விமானங்களை அரசு வாங்கியதாகவும் 'ராவய' கடந்த ஞாயிறு செய்தி வெளியிட்டதற்கே இந்த மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைத்தரகர் ஒருவருக்கு இவ் விமானக் கொள்வனவிற்காக 96 கோடி ரூபா வழங்கப்பட்டதென ராவய செய்தி வெளியிட்டதும் தெரிந்ததே.

## வட கிழக்கு புனர்வாழ்வுக்கு 38 லட்சம் டொலர் உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்விற்காக பத்து நாடுகள் 38 லட்சம் அமெரிக்க டொலர் நிதியை இலங்கைக்கு வழங்கியுள்ளன.

ஆஸ்திரேலியா, கனடா,

(4-ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் ஊடாக உணவுப் பொருள்கள்?

(கொழும்பு)

யாழ் மாவட்டத்துக்கு மீண்டும் காங்கேசன்துறை ஊடாக உணவுப்பொருள்களை அனுப்பி வைக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து பாதுகாப்பமைச்சு ஆராய்ந்து வருவதாகத்தெரிய வருகிறது.

பருத்தித்துறையில் இருந்து உணவுப் பொருள்களை உடனுக்குடன் இறக்கமுடியாத நிலை, கடல் கொந்தளிப்பு ஆகியவற்றை கருத்திற் கொண்டே பாதுகாப்பு அமைச்சு மீண்டும் காங்கேசன்துறைபாதையை திறப்பது பற்றி ஆராய்ந்துவருகிறது. (சு)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமசிதர் நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7052)

### அறிவுக் களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம் 7வது இதழ் 12-1-93ல் வெளியாகும் ஆனந்தா புத்தகசாலை, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (எ-2740)

### தேவை

டிமேக்கர், ட்ளே செய்வோர் வேலைக்குத் தேவை. நேரில் வரவும் சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். ஆரியபவான் சைவ உணவகம், கைதடிச் சந்தி, கைதடி. (இ-7107)

### கலர் பிலிம் பிறின்ரி

துரித கதியிலும், குறைந்த செலவிலும் கலர் பிலிம் சுருள்கள் பிறின்ரிங் செய்யலாம். Quick Photo மணிக்கூட்டு வீதி, எழிலகத்துக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (சி-7098)

### விற்பனைக்கு

ஆட்டாமா, குரக்கன்மா, அடைமா, ஒடியல்மா வகைகளை தொகையாகவும், சில்லறையாகவும் அண்ணா கோப்பிக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம் அண்ணா தொழிலகம், இணுவில். (எ-2734)

### O/L ஆண்டு 10 வகுப்புகள்

O/L ஆண்டு 10ற்கான புதிய வகுப்புகள் 02-01-93 சனி பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகின்றன யாழ். முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை. சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன ஒவ்வொரு பாடங்களும் வாரத்தில் மூன்று வகுப்புகள் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (இ-7108)


# தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்...

# கொழும்பில் தேங்கியுள்ள 1200 தபாற்பொதிகளை யாழ். எடுத்துவர முயற்சி

(கொழும்பு)

கொழும்பில் தேங்கியுள்ள 1 200 க்கும் மேற்பட்ட வட பகுதிக்கான தபாற்பொதிகள் உடனடியாக கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பிவைப்பதற்கான முயற்சிகளை கொழும்பில் தங்கி நிற்கும் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக இவர் கூட்டுப்படைத் தலைமையகத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுடன் தொடர்ந்தும் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளார்.

விரைவில் இங்கு அனுப்புவதற்கான முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக பிரதி அஞ்சல் மா அதிபர் அலுவலகம் அறிவித்துள்ளது. (சி-ரி)

# 1993-ல் உங்கள் பலன்

இவ்வாண்டு குருபகவான் 12.10.1993 வரை கன்னிராசியிலும் பின்பு துலா ராசியிலும் சஞ்சாரம் செய்வார். சனிபகவான் 04.03-93 வரை மகர ராசியிலும், பின்பு வருடம் முழுவதும் கும்பராசியில் சஞ்சாரம் செய்வர். ராகுபகவான் விருச்சிக ராசியிலும் கேதுபகவான் இடபராசியிலும் சஞ்சரிக்கின்றார்.

★ மேடம்: இவ்வாண்டு மேட ராசியினர் ஏற்றம் பெறுவர். கடன் தொல்லை நீங்கும் தொழில் துறை பிரகாசமாகும். பதவி உயர்வுகள் மன மகிழ்ச்சி தரும். குடும்ப சுகம் திருப்தியாகவுள்ளது. நோய் விலகும் பூமிசேர்க்கையுண்டு.

★ இடபம்: சகோதர பகை அகலும், குடும்ப நிலை உயர்வு தரும். மனக்கசப்பு இருந்துவரும். தொழிலில் மந்தநிலை காணப்படும் பண விடயங்களில் அவதானம் தேவை. உத்தியோகஸ்தர்கள் அனுசரித்துப் போவது நல்லது

★ மிதுனம்: தொழில் மாற்றமுண்டு. அனுவசியக் குழப்பம நிலவும். குடும்ப நிலை ஏற்றம் காணும். பயணங்கள் அதிகமாகும். கல்வியில் உயர்வு தாமதமாகும். பண நிலை அமைதி தராது. வழித் தொல்லையுண்டு. அவதான ஆண்டாகும்.

★ கடகம்: தொழில் சிறப்படையும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். வீடு வாகன யோகமுண்டு தடைப்பட்ட பதவி உயர்வுண்டு. சொத்து விடயங்களில் காலதாமதம் நிலவும். கடும் உழைப்பிருக்கும். நன்மையான ஆண்டு.

★ சிங்கம்: இனசன பகை இருக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. தொழில் மேன்மையுண்டு. பங்காளர் தொல்லை தருவர். குடும்பத்தில் அச்சம் இருக்கும். மேலதிகாரிகள் நன்மை கிட்டும். பணநிலை அபிவிருத்தியடையும். மனக்குறை அகலும் ஆண்டு.

★ கன்னி: தொழில் துறையில் அமைதி குன்றும் பண நெருக்கடியுண்டு. மேலதிகாரிகளின் வெறுப்புண்டு. நோய் வாட்டும். குடும்பத்தில் நிம்மதியற்ற போக்கு நிலவும் பிறரின் அனுவசியத் தலையீடு இருக்கும். எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிக்கும் ஆண்டு

★ துலாம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வீட்டில் சுப காரியம் நடைபெறும் பண நிலைமை சரளமாக இருக்கும். பிறர் மதிப்புண்டு. அதிகாரிகள் நன்மை செய்வர். புத்திரர்களால் பெருமையுண்டு புதிய திட்டங்களுக்கு வழி வகுக்கும் ஆண்டு.

★ விருச்சிகம்; தொழில் முயற்சி வெற்றி தரும். விரோதிகள் அடிபணிவர். கடன்கள் சுமை தராது குடும்ப சந்தோசம நிலைக்கும் பண நிலைமை அபிவிருத்தியடையும். நேர்முகத் தேர்வுகள் வெற்றி தரும். உறவினர் நன்மை செய்வர். அதிர்ஷ்ட ஆண்டு.

★ தனுசு: தொழில் மாறுதல் இருக்கும் குடும்பத்தலை ஓரளவு அமைதியிருக்கும். பணநிலைமை சுமாராக இருக்கும். மனைவி உடல் நலனில்...


G. C. E.

O/L

பிரிவு II

ஆரம்பம்:


# இராசி பலன்

02-01-1993

(தமிழுக்கு மார்கழி 18)

சனிக்கிழமை

நவமி மு இ. 9-06 வரை, ரேவதி மு. ப. 8-45 வரை. இராகுகாலம் காலை 9-30 11-00 வரை, சுபநேரம் மாலை 3-30 முதல் 5-00 வரை மரணயோகம்.

மேஷம்: பெண்களால் ஆதாயம் தயாளகுணம். குடும்ப மகிழ்ச்சி.

இடபம்: பெரிய மனிதர் விரோதம், தொழில் கஷ்டம், மனக்குறை.

மிதுனம்: எதிரியால் நன்மை. பணப் புழக்கம், அதிக வேலைப்பளு.

கடகம்: புதிய பதவி, மனோ வசியம், தொழில் சிறப்பு.

4ம் பக்கம் பார்க்க)


பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்

# Patrician Institutes

## தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. **Computer Processing Courses.**
   (1) Computers Programming in BASIC Language and MS-DOS.
   Duration: 4 months. Commencing: 11-01-1993
   (2) Word Processing and MS-DOS.
   Duration: 3 months. Commencing: 11-03-1993.
   ★ WEEK DAY CLASSES (Theory and Practicals).
   (3) dBASE III PLUS and MS-DOS.
   Duration: 4 months Commencing: 16-01-93.
   (4) LOTUS 1-2-3 (Spread Sheet Analyais) and MS-DOS.
   Duration: 4 months Commencing: 16-01-93.
   ★ WEEK END CLASSES Theory and Practicals.
   ★★ Equipment Used: LASER XT/2 XT/3, 386 and Bitcom Computers (IBM Compatibles.)
   ★★ Qualification: G. C. E. (O/L).

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 11-01-1993 திங்கட்கிழமை ஆரம்பமாகும்

2. **Civil Draughtsmanship and Quantity Surveying**
   Course Covers
   (i) Draughtsmanship
   (ii) Engineering Drawing
   (iii) Building Construction
   (iv) Civil Engineering Materials
   (v) Building Quantity
   (vi) Building Materials
   ★★ Qualification, G. C. E. (O/L) Duration: 6 months
3. **City And Guilds of London Examination Year - 93/94**
   (1) Quantity Surveying
   part I & II
   Subjects: (i) Engineering Science & Circuits
   (ii) Power
   (iii) Electronic
   ★★ Qualification: G. C E. (O/L)
   part III
   Subjects: (i) Advance Electrical Technology
   (ii) Generation Transmission & Distribution of Electrical Enerky
   ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
   ★★ Qualification: part II சித்தி எய்தியோர் மட்டும்.
4. **Special English Classes**
   இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகியகாலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்.
5. Toefl (Test of English as a Foreign Language)

காமை) யாழ்ப்பாணம்.
(சி-7098)


## விற்பனைக்கு

ஆட்டாமா, குரக்கன்மா, உடன்மா, ஒடியல்மா வகைகளை தொகையாகவும், சில்லறையாகவும் அண்ணா கோப்பிக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில்.
(எ-2734)

## O/L ஆண்டு 10 வகுப்புகள்

O/L ஆண்டு 10ற்கான புதிய வகுப்புகள் 02-01-93 சனி பி. ப. 2-30 மணிக்கு ஆரம்பமாகின்றன யாழ். முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை. சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன ஒவ்வொரு பாடங்களும் வாரத்தில் மூன்று வகுப்புகள் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
(சி-7106)


## தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரிலுள்ள வியாபார நிறுவனம் ஒன்றில் வைத்து இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்கள்.

அண்மைக்காலமாக பெருமளவு தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைதுசெய்யப்பட்டுவருவதும் தெரிந்ததே.
(க-பி)

## இலவச திருமணப்பதிவு

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு தெங்கு பனம் பொருள் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலியின் ஆதரவில் புத்தூர் கிராமாட்சி மன்றப்பகுதிகளில் வாழும் திருமணப்பதிவின்றி வாழ்ந்து வந்த 75 தம்பதிகளுக்கு திருமணப்பதிவு நடைபெற்றது.

புத்தூர் மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் பதிவாளர் திரு க. இக்கோயம் பலவாணரால் பதிவுகள் நிறைவேற்றி வைக்கப்பட்டது. திருமணப்பதிவு செய்த தம்பதிகளுள் 31 பேருக்கு கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு த. சபாரத்தினத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

நீங்கும் தொழில் துறை பிரகாசமாகும். பதவி உயர்வுகள் மன மகிழ்ச்சி தரும். குடும்ப சுகம் திருப்தியாகவுள்ளது. நோய் விலகும் பூமிசேர்க்கையுண்டு.

★ இடபம்: சகோதர பகை அகலும், குடும்ப நிலை உயர்வு தரும். மனக்கசப்பு இருந்துவரும். தொழிலில் மந்தநிலை காணப்படும் பண விடயங்களில் அவதானம் தேவை. உத்தியோகஸ்தர்கள் அனுசரித்துப் போவது நல்லது

★ மிதுனம்: தொழில் மாற்றமுண்டு. அனாவசியக் குழப்பம் நிலவும். குடும்பநிலை ஏற்றம் காணும். பயணங்கள் அதிகமாகும். கல்வியில் உயர்வு தாமதமாகும். பண நிலை அமைதி தராது. வழித் தொல்லையுண்டு. அவதான ஆண்டாகும்.

★ கடகம்: தொழில் சிறப்படையும். குடும்பத்தில் சந்... பணநிலை அபிவிருத்தியடையும். மனக்குறை அகலும் ஆண்டு.

★ கன்னி: தொழில் துறையில் அமைதி குன்றும் பண நெருக்கடியுண்டு. மேலதிகாரிகளின் வெறுப்புண்டு. நோய் வாட்டும். குடும்பத்தில் நிம்மதியற்ற போக்கு நிலவும் பிறரின் அனாவசியத் தலையீடு இருக்கும். எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிக்கும் ஆண்டு

★ துலாம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வீட்டில் சுபகாரியம் நடைபெறும் பண நிலைமை சரளமாக இருக்கும். பிறர் மதிப்புண்டு. அதிகாரிகள் நன்மை செய்வர். புத்திரர்களால் பெருமையுண்டு புதிய திட்டங்களுக்கு வழி வகுக்கும் ஆண்டு.

★ விருச்சிகம்; தொழில் முயற்சி வெற்றி தரும். விரோதிகள் அடிபணிவர். கடன்கள் சுமை தராது குடும்ப சந்தோசம் நிலைக்கும் பண நிலைமை அபிவிருத்தியடையும். நேர்முகத் தேர்வுகள் வெற்றி தரும். உறவினர் நன்மை செய்வர். அதிர்ஷ்ட ஆண்டு.

★ தனுசு: தொழில் மாறுதல் இருக்கும் குடும்பத்தில் ஓரளவு அமைதியிருக்கும். பணநிலைமை சுமாராக இருக்கும். மனைவி உடல் நலனில் அக்கறை தேவை. சுபகாரியங்களால் அதிக செலவுண்டு திருமண யோகமுண்டு. அமைதியான ஆண்டு.

★ மகரம்: தொழிலில் புதிய உற்சாகம் நிலவும். முதலீடு அதிகரிக்கும். குடும்ப நிலை மகிழ்ச்சியாக இருக்கும். அன்னியர் உதவி கிட்டும். விவசாய விருத்தியுண்டு. பிறர் விசயத்தில் பிணை நிற்பது கவலை தரும். வழமையான நிகழ்வுடைய ஆண்டு.

★ கும்பம்; தொழிலில் கடினமான போக்கு நிலவும். பண முடை அதிகமாகும். குடும்பத்துள் கருத்து வேற்றுமையுண்டு. அனாவசிய துன்பம் இருக்கும். இனசன வெறுப்புண்டு. மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகலாம். அதிக விரயமும் அலைச்சலும் உள்ள ஆண்டு.

★ மீனம்: குடும்ப பிரிவுண்டு. தொழில் ஏமாற்றம் உடல்நிலை பாதிப்படையும். தாயாரின் நலனில் அக்கறை தேவை. மேலதிகாரிகள் குறை கூறுவர். அனாவசியத் தலையீடு கவலை தரும். எடுத்த காரியங்கள் தடைபடும். முயற்சி வெற்றிதராத ஆண்டு.

-ஜோஸ்யர்


G. C. E.

# O/L

பிரிவு II

ஆரம்பம்:

3-1-93

3 மணி

SPOKEN ENGLISH

புதிய பிரிவு

ஆரம்பம்:

9-1-93

2 மணி

# O/L DAY CLASSES

ஆரம்பம்:

5-1-93

8 மணி

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி

யாழ்ப்பாணம்.

(எ-2751)



(3) dBASE III PLUS and MS-DOS.

Duration: 4 months Commencing: 16-01-93.

(4) LOTUS 1-2-3 (Spread Sheet Analyais) and MS-DOS.

Duration: 4 months Commencing: 16-01-93.

★ WEEK END CLASSES Theory and Practicals.

★★ Equipment Used: LASER XT/2 XT/3, 386 and Bitcom Computers (IBM Compatibles.)

★★ Qualification: G. C. E. (O/L).

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 11-01-1993 திங்கட்கிழமை ஆரம்பமாகும்

## 2. Civil Draughtsmanship and Quantity Surveying

Course Covers

(i) Draughtsmanship
(ii) Engineering Drawing
(iii) Building Construction
(iv) Civil Engineering Materials
(v) Building Quantity
(vi) Building Materials

★ ★ Qualification, G. C. E. (O/L) Duration: 6 months

## 3. City And Guilds of London Examination Year - 93/94

(1) Quantity Surveying

part I & II

Subjects: (i) Engineering Science & Circuits
(ii) Power
(iii) Electronic

★★ Qualification: G. C. E. (O/L)

part III

Subjects: (i) Advance Electrical Technology
(ii) Generation Transmission & Distribution of Electrical Enerky

ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★★ Qualification: part II சித்தி எய்தியோர் மட்டும்.

## 4, Special English Classes

இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகியகாலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்.

## 5. Toefl (Test of English as a Foreign Language)

Duration : 4 months.

## 6 Short Hand and Typing (English)

சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

## 7 Motor Mechanism

மோட்டார் வாகனம் திருத்துதல் காலம் - 6 மாதங்கள்

## 8. Air Condition and Refrigeration

காலம் - 4 மாதங்கள்

## 9. Motor winding

மோட்டர் வைண்டிங் காலம் - 4 மாதங்கள்

## 10. Electrical Wiring

மின்சார இணைப்பு காலம் - 3 மாதங்கள்

## 11. General Electrician

ஜெனரல் எலக்ரீஸியன் காலம் - 4 மாதங்கள்

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்

1. அடிப்படை மின்சாரம் (AC/DC) — Basic Eleetrictiy
2. மோட்டர் வைன்டிங் — Motor Winding
3. ஆமேச்சர் வைன்டிங் — Armature Winding
4. ரான்ஸ்போமர் வைன்டிங் — Transformer Winding
5. எல்லா விதமான மின் உபகரணங்கள் பழுது பார்த்தல் இயக்குதல் — Repairing of All Type of — Electrical Eqipments

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக விபரங்களுக்கு;

பதிவாளர்.
பற்றிஷன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, செயின் பற்றிக்ஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

REGISTRAR
Patrician Institute of Higher Studies,
59, St. Patricks Road,
Jaffna.
(A-2754)

# றெனியின் கூட்டத்தை குழப்பியபோது களுத்துறை எம்.பி. மீது தாக்குதல் நடந்தது

## — றெனியிருந்த வீடு மீது பலத்த சூடு —

(கொழும்பு)

புளத்சிங்கள பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திரு. றெனி டீ மெல்லின் கூட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி பல தகவல்கள் கிடைத்துள்ளன. அதன் விபரம் வருமாறு:

திரு. றெனி டீ மெல்லை வரவேற்று புளத்சிங்கள நகரில் மாபெரும் வரவேற்புக்கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதற்காக புளத்சிங்கள நகரம் பெருமளவில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலும் பச்சைவர்ணக் கொடிகளாலே அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

இதனால் ஆத்திரமுற்ற களுத்துறை மாவட்ட ஐ. தே. க. எம். பி திரு. சரத் ரணவாகவின் ஆதரவாளர்கள் ஐ. தே. க. வின் பச்சைவர்ண கலரில் அலங்காரம் செய்யப்பட்டது தவறெனக் கூறி, அலங்காரங்களை அகற்றிகறுப் புக்கொடிகளை கட்டினர். இதையடுத்து றெனியின் ஆதரவாளர்களுக்கும் களுத்துறை எம். பி யின் ஆதரவாளர்களுக்குமிடையில் பெரும் மோதல் ஏற்பட்டது. கூட்டத்தைக் குழப்ப இவர்கள் முயற்சித்தனராம்.

அந்த இடத்திற்கு எம். பி. திரு. சரத் ரணவாக சென்றபோது மோதல் வலுப்பெற்றதுடன் எம் பி. மீது பலத்த தாக்குதலும் நடத்தப்பட்டது. அவரும் அவரது ஆதரவாளர்களும் கல்வீச்சுக்கும், பலத்த தாக்குதலுக்கும் இலக்காகினர்.

உடனடியாக அங்கு வந்த பொலிசார் எம். பி. யையும் அவரது ஆதரவாளர்களையும் அந்த இடத்திலிருந்து வெளியேறுமாறு கோரி அவர்களை அங்கிருந்து அகலச்செய்தனர். இதையடுத்து தமது ஜீப்பிலும் ஏனைய இரு மாகாண சபை உறுப்பினர்களின் ஜீப்பிலும் அவர்கள் சென்றனர்.

இதன்பின் நடந்த சம்பவங்களை, களுத்துறை எம். பி. திரு. சரத் ரணவாகவின் சகோதரரும், றெனியின் கூட்ட அமைப்பாளருமான திரு கீர்த்தி ரணவாக கூறுகையில், புளத்சிங்களவில் திரு. றெனிக்கான வரவேற்புக்கூட்டத்தை நான் ஒழுங்கு செய்திருந்தேன். அதற்காக வந்த திரு றெனி எனது வீட்டில் தங்கிநின்றார். அவ்வேளையில் எனதுவீட்டினருகில் வந்த களுத்துறை எம். பி. க்கும், மாகாணசபை உறுப்பினர்களுக்கும் சொந்தமான மூன்று ஜீப் வண்டிகளிலிருந்து எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பப்பட்டன. அதிலிருந்த பலர் கூக்குரலிட்டனர். அப்போது அதில் ஒரு ஜீப்பில் எனது சகோதரரான களுத்துறை எம். பி.யும் இருந்தார்.

எனது வீட்டைத் தாண்டி மூன்று ஜீப்வண்டிகளும் சிறிது தூரம்சென்று மீண்டும் திரும்பி வந்தன. ஜீப்வண்டிகள் எனது வீட்டுக்கு மிக அருகில் வந்ததும் அதிலிருந்தவர்கள் எனது வீட்டை நோக்கி சரமாரியாக சுட்டனர். எனினும் எங்களுக்கோ திரு. றெனி டீ மெல்லுக்கோ எதுவித காயமோ ஆபத்தோ ஏற்படவில்லை.

சூடு நடந்தபோது எமது வீட்டைத் தாண்டிச்சென்ற வழிப்போக்கர் ஒருவர் சூடுபட்டு உயிரிழந்தாரெனக் கூறினார்.

இதையடுத்து புளத்சிங்களவில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன் கடைகள் யாவும் மூடப்பட்டன. புளத்சிங்கள பெரும் யுத்தகளமாக மாறியது. ஐ. தே. க. ஆதரவாளர் இருவரினது வாகனங்கள் தீக்கிரையாக்கப் பட்டதுடன் சில கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டது. வரவேற்புக் கூட்டமும் கைவிடப்பட்டது. (சி)

## யாழ்ற்ரன் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி எதிர்வரும் 4ம் திகதி திங்கட்கிழமை முதல் வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோவில் கலியாண மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. அனைத்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் சமூகம் தருமாறு கல்லூரி அதிபர் திரு. பரமசிவம் கேட்டுள்ளார். (ஈ)

## மீளக் குடியமர்வு

(அரியாலை)

அராலியிருந்து இடம்பெயர்ந்துவந்து நவாலி, ஆனைக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் தங்கிய மக்கள் மீண்டும் அராலிக்கு மீளக்குடிமயர்ந்துள்ளனர்.

இது இவ்விதமிருக்க காரைநகர், தோப்புக்காடு, தீவகத்திலுள்ள ஊர்காவற்றுறை, தம்பாட்டி ஆகிய இடங்களிலுள்ள மீனவக் குடும்பங்களும் அராலியில் குடியேறியுள்ளதாகத் தெரியவருகிறது. (59)

## எம். பியின் மெய்ப்பாதுகாவலரின் துப்பாக்கி பறிமுதலானது

(கொழும்பு)

புளத்சிங்களவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 'எஸ்-84' ரகத் துப்பாக்கியை, களுத்துறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி எம். பி.யின் மெய்ப்பாதுகாவலரிடமிருந்து பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இதேவேளை இச்சம்பவத்தை நேரில் பார்த்த திரு. றெனி டிமெல்லினதும், களுத்துறை எம். பி.யினதும் ஆதரவாளர்கள் சுமார் 20 பேரிடமிருந்து பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இதேவேளை அரச ஆதரவாளர்களின் அறிக்கை கிடைக்கும் பட்சத்தில், சந்தேகநபர் கைது செய்யப்படலாமெனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

## றெனி டி மெல்லுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் திரு. றெனி டிமெல்லுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புளத்சிங்களவில் கடந்த ஞாயிறு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்தே திரு றெனிக்கான பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது.

தற்போது இவர் எந்தக் கட்சியிலும் சேராத நிலையில் புதிய கட்சி ஆரம்பிப்பதா? அல்லது மீண்டும் லண்டன் திரும்புவதா? என யோசித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. (சி)

## யாழ். ஆஸ்பத்திரியில் 1992ல் 4 லட்சம் நோயாளர் சிகிச்சை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

1992ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 31-ம் திகதி வரை யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிலும், சகல விடுதிகளிலும் நான்கு லட்சத்திற்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த வருட பிற்பகுதியில் வைத்தியசாலைக்கென போதியளவு மருந்து வகைகள் அனுப்பப்படாத நிலையில் நோயாளர்களுக்கு முடிந்த அளவில் மருந்துகள் வழங்கப்பட்டதுடன் உரிய சிகிச்சைகளும் நடந்துள்ளன.

வெளிநோயாளர் பிரிவில் 92ம் ஆண்டு விடுதிகளில் 58,675 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 500க்கும் மேற்பட்ட நோயாளர் தற்போது விடுதிகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். (56)

## விமான கட்டணம் 500 ரூபா உயர்வு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடு செல்லும் விமானப் பயணிகளின் பயணக் கட்டணம் 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவலை ஏயர் லங்கா வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. (க)

## அமைச்சர் விஜயம்

(மட்டுநகர்)

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா நேற்று மட்டக்களப்புக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இராணுவ உயர் அதிகாரிகள் சகிதம் மட்டுநகருக்கு விஜயம் செய்த அமைச்சர் முதல் நடவடிக்கையாக மட்டுநகர் ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளையுடன் பேச்சுக்கள் நடாத்தினார். - வி

## மரம் நடுகை

[தாளையடி]

யாழ் மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் கடற்கரையோர வீதியெங்கும் சவுக்குமரம்நாட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. [163]

## ☆ சுப்பிரமணிய சுவாமியைத்தாக்க வெடிகுண்டு, அசிட் சகிதம் சென்னையில் குண்டர்படை குவிப்பு

(சென்னை)

தங்களைக் கொலை செய்வதற்காக மதுரையிலிருந்து சென்னைக்கு, 36 குண்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளார்கள் என ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வெடிகுண்டு, பயங்கர ஆயுதங்கள், அசிட் மூலம் எங்களைத் தாக்குவதற்கு அந்தக் குண்டர்கள் சென்னையில் ஒரு வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களைத் தமிழக அமைச்சர் ஒருவரே ஏற்பாடு செய்துள்ளார்.

என்னை வெடிகுண்டு வீசிக் கொலைப்போவதாக எனக்கு மிரட்டல் கடிதங்கள் வந்துள்ளன. இப்படியான மிரட்டல்கள் எனக்குப் புதிதல்ல. சரிநாடகத்தில் என் மீது அசிட் வீச முயற்சி நடந்தது ஆகவே இது எனக்குப் புதிதல்ல.

ஜெயலலிதாவின் இந்த மிரட்டல்களுக்கெல்லாம் நான் பயந்துவிடமாட்டேன். மத்திய அரசு இனியும் மௌனம் சாதிக்கக்கூடாது. உடனடியாக இதில் தலையிட்டு, அ. தி. மு. க. ஆட்சியைப் பதவி நீக்கம் செய்யவேண்டும். இப்படியான ஒரு காட்டுமிராண்டித்தனமான ஆட்சி, தமிழகத்திற்குத் தேவையில்லை எனவும் கூறினார். (சி)

## தாண்டிக்குளம் இராணுவ தடைமுகாமில் வானொலிப்பெட்டி பறிமுதல்

(பண்டத்தரிப்பு)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவத் தடைமுகாமில் வைத்து, மத்திய கிழக்கு நாடு ஒன்றில் வேலைபார்த்துவிட்டு வந்த சண்டிலிப்பாய் வாசி ஒருவரின் 3,000 ரூபா பெறுமதி வாய்ந்த வானொலிப் பெட்டி கடந்த வாரம் பறிமுதல் செய்யப்பட்டது.

பற்றறிகளுடன் இயங்கக் கூடிய நிலையிலிருந்த இந்த வானொலிப் பெட்டியைப் பரிசோதனை செய்த இராணுவத்தினர் இதைக் கொண்டு செல்ல அனுமதிக்கமுடியாது என்றும், வேண்டுமானால் வவுனியா நகருக்குச் சென்று அதை அங்கு விற்றுவிட்டு வருமாறு தெரிவித்தனராம்.

வேறு வழியின்றித் தாம் ஆசையுடன் கொண்டுவந்த வானொலிப் பெட்டியை அங்கு கைவிட்டு வந்துவிட்டாராம். (72)

## அஸாம் தீவிரவாதிகளை சரணடைய உத்தரவு

(புதுடில்லி)

அஸாமில் 'உல்பா' தீவிரவாதிகளை இம்மாதம் 31ம் திகதிக்கு முன் சரணடையுமாறு அஸாம் அரசு அறிவித்துள்ளது.

இந்த உத்தரவை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இவர்கள் குற்றவாளிகளாக பிரகடனப் படுத்தப்பட்டு இவர்களின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படுமெனவும் அஸாம் அரசு எச்சரித்துள்ளது.

அஸாம் அரசுக்கு எதிராக உல்பா தீவிரவாதிகள் தொடர்ந்தும் தாக்குதலை நடாத்தி வருவது தெரிந்ததே. (இ)

## பல்கலைக்கழக நிதியாளர் விடுதலைசெய்யப்படுவார்

(கொழும்பு)

அண்மையில் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக் கழக நிதியாளர் திரு. காந்தமூர்த்தியும், யாழ். ஐக்கிய வியாபாரசங்க கொழும்பு கிளைச் செயல் முகாமையாளர் திரு. தம்பிராஜாவும் இன்னும் ஒரு வாரத்தினுள் விடுதலை செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். பல்கலைக் கழகப் பிரதிநிதியொருவர் கொழும்பு சென்று பொலிஸ் தலைமையகத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தையையடுத்தே இவர்களை விடுதலை செய்வதற்குப் பொலிஸ் தலைமைக் காரியாலயம் இணங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. (159-ரி)

## சைவசித்தாந்த விரிவுரைகள் இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கும் 'சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்' தொடர்ப் பொது விரிவுரைகள் ஆரம்ப விழா, இன்று காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இவ்விழாவுக்கு பேராசிரியர் அ. துரைராசா தலைமை வகிப்பார். வரவேற்புரையையும், நிகழ்ச்சி விளக்கத்தினையும், புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் நிகழ்த்துவார். ஆரம்ப உரையைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரியாரும், சிறப்புரையைப் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியும் நிகழ்த்துவார்கள்.

இன்று 'வரலாற்று நோக்கில் சைவ சித்தாந்தம்' என்னும் தலைப்பின் கீழ் 'சைவமும், சித்தாந்தமும்' என்னும் பொருள் பற்றி கலாநிதி நா. ஞானகுமாரன் உரையாற்றுவார். (இ)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

பகுதிநேர ஆங்கில உதவி ஆசிரியர்களாக கடந்த வருடம் நியமனம் பெற்ற அனைவரும் தொடர்ந்தும் மறு அறிவித்தல் வரை சேவையாற்ற அனுமதிக்கப்படுவர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மிக விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

1992ல் பகுதிநேர ஆங்கில உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களின் சேவை தொடர்ந்தும் தேவைப்படாத பாடசாலை அதிபர்கள் அது பற்றி உடனடியாக அறிவிக்கும்படி யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை 31-12-92 இல் 65 வயதை பூர்த்தி செய்தவர்கள் தொடர்ந்தும் சேவையாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (159)

## டெங்கு பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் தற்போது டெங்கு காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகிறது. டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பெருந்தொகையான நோயாளர்கள் யாழ் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை யாழ் போதனா வைத்தியசாலையில் இருவர் டெங்கு காய்ச்சலால் மரணமடைந்துள்ளனர். (159)

## மரண அறிவித்தல்

### கந்தையா - சின்னத்தம்பி

(அரசாங்க கட்டிட ஒப்பந்தக்காரர்)

உடுவிலைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி 31-12-92ல் காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையா பொன்னம்மாவின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற கணபதி லெட்சுமியின் அன்பு மருமகனும், ஞானியின் அன்புக் கணவரும், பாரு செல்வநாயகி, செல்வநாயகம் (அரசாங்க ஒப்பந்தக்காரர்), செல்வசீலன் (அலோமரஸ் சுன்னாகம்), வ. செல்வரஞ்சினி (அவுஸ்திரேலியா) செல்வகுமாரி (சவுதி), செல்வரஞ்சன் (ரஞ்சன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சி. பாலசுப்பிரமணியம் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), பே. வரோதயன் (விரிவுரையாளர் அவுஸ்திரேலியா), சந்திரராணி, சாந்தகுமாரி, கமலாதேவி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், க. இலங்கையர், க. மார்க்கண்டன் (வெள்ளவத்தை மின்தறி நெசவாலை), வை. தவமணி, க. ஜெயரட்ணம் (சாரதி C. T. B. காரைநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜீவராசா, கிரிதேவ், தேவதர்சினி, அனுசிலா, ராகவேந்தன் அலோமா, அகிலன், அசான், டேவிட் பிரகாஸ், பிரபா, கரன், செல்வி, ஆரணியா, ஜிதுஸ்மன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

2-1-93 (இன்று) சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதி ஆராதனை நடைபெற்று மல்வம் சேமக்காலைக்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(சி-7112) செல்வரஞ்சன் (ரஞ்சன்)

### தேவசகாயம் அருளானந்தம்

தேவசகாயம் அருளானந்தம் அவர்கள் 01-01-1993ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி மகடலின் ஜெயராணி (ராணி), இம்மனுவேல் (விக்டர்) F. P. L. புகையிரதத்திணைக்களம் (நீர்கொழும்பு), ஆனந்தராசா (சுவிஸ்), திருமதி றெசபெல் (செல்வா) ஆகியோரின் அன்புத் தந்தையும், றெகேசன் பிரான்சிஸ் (மாஸ்டர் மாமா) சாந்தி, ஜெனோவா, மரியதாஸ் (உதவித்தபால் அதிபர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற றேசம்மா, மரியமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். இவர் புனித சம்பத்திரிசியார் கல்லூரி ஊனல், (சதீஸ்) சயந்தன், திருக்குடும்பக்கன்னியர்மடம் மொயிரா, கவிதா, சபிந்தினி, நிஷாந்தி, புனித பரியோவான் கல்லூரி கிருஷாான், அருள் கோபிநாத் மற்றும் அஜந்தன், ரவிராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும் திரு. றேகேசன் யோசவ் (முன்னாள் அதிபர்), திருமதி எலிசபெத் (முத்தம்மா) ஆகியோரின் சம்பந்தியுமாவார். இவரது பூதவுடல் 63, மருதடி வீதி இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக இன்று 02 01-1993 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்; றெகேசன் பிரான்சிஸ்
(விவண்ணன்)

63, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (சி-7113)

அயோத்தி விவகாரம்:

# பள்ளிவாசல் இடித்த இடத்தில் இந்துக்கள் வழிபட அனுமதி

## இந்திய உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(டில்லி)

அயோத்தி நகரில் இந்துக்களால் தகர்த்தெறியப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல் இருந்த இடத்தில் இந்துக்கள் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என இந்திய நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பள்ளிவாசல் இருந்த இடத்தில் கட்டப்பட்ட தற்காலிக கோவிலில் இராமபிரானின் சிலையும் ஏனைய இந்துத் தெய்வங்களின் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன.

பள்ளிவாசல் இருந்த இடத்தில் தாங்கள் தொழுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர்.

பள்ளிவாசல் இருந்த இடத்துக்கு சென்று வழிபட இந்துக்களுக்கு அனுமதி வழங்கப்படும் என அயோத்தியாவுக்கு பொறுப்பான உள்ளூராட்சி அதிகாரிகள் வெளியிட்ட அறிவித்தலுக்கு சட்ட பூர்வமான இணக்கத்தை கொடுத்திருக்கின்றது இந்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக் கூறப்படுகின்றது.

பி, ஜே. பி, கட்சியின் உள்ளூர் தலைவர் ஒருவர் நீதிமன்றத்தின் இந்த முடிவை வரவேற்றுள்ளார்.

இதேவேளையில் இந்த தற்காலிக கோவிலில் வழிபடவிடும்வரை தாங்கள் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக 60க்கும் அதிகமான இந்துத் துறவிகள் உண்ணாவிரதம் இருக்கின்றனர். (இ-சு)

# பூநகரியில் நான்கு படையினர் பலி

(கொழும்பு)

பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 4 படையினர் உயிரிழந்ததாகவும் ஒரு சிப்பாய் காயமடைந்ததாகவும் இராணுவவட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை இத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க)

# அமைச்சர் ஜோன்

## மட்டு படைமுகாம்களுக்கு விஜயம்

(கொழும்பு)

பதில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்க மட்டக்களப்பிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களுக்கும், பொலிஸ் நிலையங்களுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க வவுனியாவுக்கும் நேற்று முன்தினம் விஜயம்செய்தனர்.

மட்டக்களப்பு, வவுனியா பகுதிகளிலுள்ள படையினரை உற்சாகப்படுத்துவதே இவர்கள் விஜயத்தின் முக்கிய நோக்கமாக இருந்ததென இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

வடக்கு கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன், வத்திக்கான், இத்தாலி, டென்மார்க், அமெரிக்கா, பிரான்ஸ், சுவீடன், சுவிஸ்சர்லாந்து ஆகிய நாடுகளே இந்நிதிஉதவியை வழங்கியுள்ளன.

ஏற்கனவே இப்பகுதிக்கென வழங்கப்பட்ட நிதியுதவிகள் தென்பகுதிக்கு திருப்பிவிடப்பட்டதும் தெரிந்ததே. (சி)

ஆண்டு 1

(1-ம் பக்க தொடர்ச்சி)

திணைக்களத்தில் நடைபெறவுள்ளது

தினமும் காலை 8.30 மணிக்கு பயிற்சிவகுப்பு ஆரம்பமாகும் எனவும் சகல ஆரம்ப ஆசிரிய ஆலோசகர்களையும் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைக்கவேண்டும் எனவும் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (157)

நள்ளிரவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வயல் வெளிகளிலும் இவை விழுந்தமையால் குறிப்பிடத்தக்க பாதிப்புக்கள் நிகழவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

நித்திரையிலிருந்துதிடீரென எழுந்த வலிமேற்குப் பிரதேச பொதுமக்கள் இந்த வேட்டுக்களின் நெருப்புத்துணைப் போன்ற சன்னங்கள் வான் வெளிக்குச்சென்று கீழே விழுவதைக்காணக் கூடியதாக இருந்தது என தெரிவித்தனர். (139-71-72)

இராசிபலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கம்: பயண துன்பம், பெற்றோர் வெறுப்பு, பண முடை.

கன்னி: உறவினர் சினம், முயற்சி தடை, உடல் உபாதை.

துலாம்: மனைவியால் ஆதாயம் அயலார் உதவி, காரிய சித்தி.

விருச்சிகம்: தொழில் இலாபம், சுபகாரியம், இனசன வருகை.

தனுசு: சகோதர பகை, வேண்டாத தொல்லை, அலைச்சல்.

மகரம்: அவசர முடிவு, நிம்மதிக் குறைவு, தவறுகள் போகும்.

கும்பம்: கலாரசனை, வாக்குச் சாதுரியம், குடும்ப உல்லாசம்.

மீனம்: குடும்பச்சிக்கல், தனிமையை நாடல், அகங்காரம்.

— ஜோஸ்யர்

எதிர்க்கட்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் பேசுகையில் இனப்பிரச்சினைதீர்வுக்கு பலவிதமான முட்டுக்கட்டைகள் உள்ளன. அவை உடனடியாக தீர்க்கப்படவேண்டும் அல்லது இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது.

இங்கே மகா நாயக்க தேரர் தெரிவித்த கருத்து இனப்பிரச்சினை தீர்வுக்கு நல்லதொரு பாதையைத் திறந்து விட்டிருக்கிறது.

அரச தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் இதன் மூலம் புதிய உத்வேகத்தைப் பெறுவார்கள். - இ

சிறுபான்மை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் தமது இந்த எண்ணத்தை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: நீண்டகாலமாக நிலவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பது அவசியம். தமிழர் பிரச்சினையை வெறுமனே உள்நாட்டு விவகாரமாகக் கருதக் கூடாது. இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண்பதன்மூலம் நாட்டின் நலன்களை பாதுகாக்க முடியும். (க)

படையினரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன அம்பாறைக்கு விஜயம் செய்து அங்குள்ள படையினரை உற்சாகப்படுத்தும் விதமாக அவர்களுக்கு பலவகையான அன்பளிப்புப் பொருட்களை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த முனைகளில் புலிகளின் அதிரடிகளினால் சோர்வுற்றிருந்த படையினரை உற்சாகப்படுத்தி அவர்களை பழைய நிலைக்குக் கொண்டுவருவதே இந்த இரண்டு உயர் தளபதிகளின் விஜயத்தின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டது. (இ-க-சு)

இராணுவத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேர் வரையில் மரணமடைந்துள்ளனர். அடக்குமுறை மூலம் இப்பிரச்சினையை தீர்ப்பது அரசின் நோக்கமல்ல, சிறுபான்மைத் தமிழரின் பேராட்டத்தை பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துக் கொள்ளவேண்டும்.

சகலரும் தத்தம் புத்திக்கூர்மையைபயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயலவேண்டும். அன்றேல் வடக்கு கிழக்கு யுத்தம் நீடித்துக் கொண்டே செல்லும் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் வருடாந்தம் செலவிடப்படும் 2, 300 கோடி ரூபாவை மீதப்படுத்த முடியுமென்றும் தெரிவித்தார். (க)

படையில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (ச)

## கடனுதவி நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வன் செயலால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கான இரண்டாயிரம் ரூபா கடனுதவி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இக்கடன் நிறுத்தப்பட்டமைக்கு நிதிப்பற்றாக்குறையே காரணமென கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (159)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இலன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B